
உ
சிவமயம்



அமரர் திருமதி புவனேஸ்வரி அம்மா சதா சிவக்குருக்கள்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

16-04-2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## அமரர்
## திருமதி புவனேஸ்வரி அம்மா சதா சிவக்குருக்கள்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**16-04-2006**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்

குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து
அன்போடும் பண்போடும்
பாசத்தோடும் பேணிப் பாதுகாத்து
எம்மை நல்வழி நடாத்தி
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
எமது அன்புத் தெய்வத்தின்
பொன்னடிகளில் காணிக்கையாக
இந் நினைவு மலரினைச்
சமர்ப்பிக்கின்றோம்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# திருமதி புவனேஸ்வரி அம்மா சதா சிவக்குருக்கள்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 28-04-1918 | 07-04-2006 |

## திதி வெண்பா

பார்த்திப ஆண்டு பங்குனித் திங்கள்
இருபத்து நான்காம் நாள்எழுந்த வெள்ளியில்
இலங்கு பூர்வ தசமியில் எம்மூதாட்டி
புவனேஸ்வரி புனிதன்தாள் அடைந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# தோத்திரப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஒரு ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்று வாய்நீ
துணையா யென்நெஞ்சந் துறுப்பிப்பாய் நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும் நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையேயாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் படித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னியதில் லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவீகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.

## பட்டினத்தார் பாடல்

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னின்னம் பலவன்
அடிசார்ந்து நாமுய்யவேண்டு மென்றே யறிவாரில்லையே.

## தேற்றம்

*(அறுசீர் விருத்தம்)*

குஞ்சரம் ஊர்ந்த கோவும் குவலயம் மீதில் ஓர்நாள்
வஞ்சகன் காலன் கையில் சேர்வது உறுதி என்று
நெஞ்சிலே கொண்டு நீங்கள் துயரத்தில் நீந்த வேண்டாம்
செஞ்சடைச் சிவனின் பாதம் வேண்டியே கடமை யாற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவஸ்ரீ சோம சதாசிவக் குருக்கள் புவனேஸ்வரி அம்மா அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

நீர் வளம் நிலவளம் மிக்க நீர்வேலி கிராமத்தில் காசிப கோத்திரத்தில் தோன்றிய ஜெகநாதக் குருக்கள் (செல்லக் குருக்கள்) பொன்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியாக தோன்றியவரே அமரர் புவனேஸ்வரி அம்மாவாகும். அவரின் ஒரே இளைய சகோதரியே அமரர் இராமநாதக் குருக்கள் அமிர்தேஸ்வரி ஆகும். (பாக்கிய சின்னம்மா) சித்திரை மாதம் 28ம் நாள் ரோகினி நட்சத்திரத்தில் 1918ம் ஆண்டு பிறந்த புவனேஸ்வரி அம்மா அவர்கள் ஆரம்பக் கல்வியை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் கற்றார் அகவை ஒன்பது ஆகிய போது காரைநகர் மணற்காடு என்னும் இடத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ சரவணபவக் குருக்கள் சோமசுந்தரக் குருக்கள் விசாலாட்சி அம்மா தம்பதிகளுக்கு பிறந்த இரண்டாவது புத்திரன் சதாசிவக் குருக்கள் அவர்களை மணந்தார். ஆசிரியப் பணியில் ஈடுபட்டிருந்த சதாவ ஐயா அவர்கள் புவனேஸ்வரி அம்மாவுடன் இல்லறத்தில் நல்லறமாக வாழ்ந்து ஞானேஸ்வரி, சத்தியோசாதசர்மா, விமலாதேவி, தேவசேணாபதி, சாந்தாதேவி, சத்தியஜெயன் ஆகிய பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்தனர்.

அமரர் அவர்களின் மூத்த மகளாகிய ஞானேஸ்வரி அவர்கள் இ. சோமஸ்கந்தகுருக்களை மணந்து ஐந்து ஆண் பிள்ளைகளையும், இரண்டு பெண் பிள்ளைகளையும் பெற்று அவர்களை இல்லறத்தில் செலுத்தி பேரப்பிள்ளைகளையும், பூட்டப்பிள்ளைகளையும் கண்டு இனிதே கொழும்பில் வாழ்ந்து வருகின்றார். இ. சோமஸ்கந்த குருக்கள் அவர்கள் அமரர் ஆகிவிட்டார். (1999)

இரண்டாவது மகனாகிய சத்தியோசாதசர்மா கல்வி கற்று அரச சேவையில் ஈடுபட்டு சுருவில் நடராசகுருக்கள் புதல்வி வித்தியாதேவியை மணந்து நான்கு பெண்பிள்ளைகளையும், ஒரு ஆண் மகனையும் பெற்று இனிதே வாழ்ந்து வருகின்றனர். மூன்று பெண் பிள்ளைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறத்தில் ஈடுபடுத்தி பேரப்பிள்ளைகளையும் கண்டு, அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்று இன்றும் கொழும்பில் சிறப்பாக வாழ்கின்றனர்.

மூன்றாவது மகளாகிய விமலாதேவி அச்சுவேலி பத்தமேனி பிரதம பூசகர் சுப்பிரமணிய சர்மாவை மணந்து நான்கு பெண்பிள்ளைகளையும், இரண்டு ஆண்பிள்ளைகளையும் பெற்று அவர்களை இல்லறத்தில் ஈடுபடுத்தி பேரப்பிள்ளைகளையும் கண்டு இன்றும் இனிதே வாழ்கின்றனர்.

நான்காவது மகனாகிய தேவசேனாதிபதி அவர்கள் வி. மாணிக்கஐயரை மணந்து ஜெயந்தி என்ற ஒரே பெண் மகளைப் பெற்று அவரை உரிய காலத்தில் நீர்வேலி அரச சேகரிப்பிள்ளையார் கோவில் பிரதம குருவாகிய அமரர் சாம்பசதாசிவக் குருக்கள் இரண்டாவது புதல்வனாகிய சோமதேவகுருக்களை மணந்து நான்கு ஆண் பிள்ளைகளையும், 2 பெண் பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளாகக் கண்டனர். வி. மாணிக்கஐயா அவர்கள் அமரர் ஆகிவிட்டார் (1990)

ஐந்தாவது மகளாகிய சாந்தாதேவி அவர்கள் நீர்வேலி கந்தசுவாமி கோவிலைச் சேர்ந்த அமரர் சுவாமிநாதக் குருக்களின் இளைய மகன் கனகபதிசர்மாவை மணந்து, பாலமுருகன், மீரா என்னும் பிள்ளைகளைப் பெற்று இனிதே வாழ்கின்றனர்.

ஆறாவது இளைய மகனாகிய சத்தியஜெயன் அவர்கள் கந்தர்மடம் தியாகராசா குருக்கள் மகள் கீதாவை மணந்து பிரார்த்தனா என்ற பெண் மகளைப் பெற்று லண்டனில் இனிதே வாழ்கின்றனர்.

இவ்வாறு சீரும் சிறப்புடன் வாழ்ந்து வந்த புவனேஸ்வரி அம்மா அவர்கள் 1998 ம் ஆண்டு தனது அன்புக் கணவராகிய சதாசிவக் குருக்களை (1998) இழந்து மனக் கவலை கொண்டார்.

பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகளின் அன்பினால் ஆட்பட்ட அமரர் அவர்கள் பின்பு சிவபதம் எய்தும் வரை சிறப்புடன் வாழ்ந்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றார் உறவினர்களுடனும் அயலவர்களுடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகிய தன்மையினால் அமரர் புவனேஸ்வரி அம்மா அவர்கள் எல்லோர் உள்ளத்திலும் இடம்பிடித்து விட்டார். புலன் அறிவுடன் வாழ்ந்து வந்த அமரர் பிற்காலத்தில் சில நாட்கள் நோய்வாய்ப்பட்டு இருந்தார். உரிய நேரம் வர பார்த்திப வருடம் பங்குனி மாதம் 24ம் நாள் (07-04-2006) வெள்ளிக்கிழமை பூர்வ தசமித் திதியிலும் ஆயிலிய நட்சத்திரத்திலும் பொன்னம்பலவாணர் அடி சேர்ந்தார்.

அன்னாரின் வாழ்க்கை பூரணத்துவம் ஆனது. இல்லறத்தில் நல்லறம், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொப்பாட்டப்பிள்ளைகள் என்ற சந்ததிச் சிறப்பு 88 வருடங்கள் வாழ்ந்து ஆயிரம் பிறை கண்ட பெருமை என்று சொல்லக்கூடிய இனிய வாழ்க்கை ஆகும் அமரரின் ஆத்மா சாந்திக்கு பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!!!

## செல்வங்கள் பதினாறு

1. புகழ்
2. கல்வி
3. வலிமை
4. வெற்றி
5. நன்மக்கள்
6. பொன்
7. நெல்
8. நுகர்ச்சி
9. நல்வாழ்
10. அறிவு
11. அழகு
12. பொறுமை
13. இளமை
14. துணிவு
15. நோயின்மை
16. நீண்ட ஆயுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்து மறையாதவர்களாகிய எமது பெற்றோர் நீர்வேலி கு. சதாசிவக் குருக்கள் (வாத்தியார்) புவனேஸ்வரி அம்மா இருவரையும் தெரியாதவர்கள் மிகவும் குறைவு. எமக்கு அன்பையும் பண்பையும் அறிவையும் உட்டி வளர்த்து காலா காலத்தில் எமக்குரியவைகளை எல்லாம் செய்து நாம் வாழ்வதற்கு வழிகாட்டிய நமது பெற்றோர் இப்போது நம்மிடம் இல்லை.

தந்தையார் இறந்த பின்பும் தனது பிள்ளைகளுக்காகவும் பேரப்பிள்ளைகளுக்காகவும் பூட்டப்பிள்ளைகளுக்காகவும் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து வந்தவர் எனது அன்னை. நாம் எந்த நாட்டிலே இருந்தாலும் எங்களைப் பற்றிய சிந்தனைகளுடனும் எம்மைக் கண்டால் அகமகிழ்ந்து எம்மை எல்லாம் சிறு பிள்ளைகளாகவே நினைத்து அன்புடன் அணைத்து உணவளித்து வேண்டிய ஆலோசனைகள் சொல்லி எமக்கு உறுதுணையாக இருந்தார்கள்.

அம்மாவிற்கு அருகிலே இருந்து வேண்டிய பணிவிடைகளை அன்புடன் செய்து அம்மாவைப் பார்த்து வந்த சகோதரி தேவா மகள் ஜெயந்தி இவர்களுடன் நாங்கள் அடிக்கடி தொடர்பு கொண்டு அம்மாவின் நலம் பற்றி விசாரிப்போம். எனது மூத்தவள் ஞானம் எப்போது வருவாள்? அவளையும் பிள்ளைகளையும் நான் பார்க்கவேண்டும் என்று கேட்டு எம்மைப் பார்ப்பதற்கு ஆவலாக இருந்தார்கள். ஆனால் அம்மாவை கடைசி நேரத்தில் பார்ப்பதற்கு நாம் கொடுத்து வைக்கவில்லை. சில மாதங்களுக்கு முன்னர் அம்மாவை நான் பார்த்த பொழுது பழைய கதைகள், பழைய வாழ்க்கைகள் பற்றி எல்லாம் எதுவித ஞாபகமறதியும் இன்றி தெளிவாகப் பேசினார்கள். இப்போது திடீர் என்று எம்மைவிட்டு பிரிந்து விடுவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. அம்மாவின் பிரிவு எமக்கு ஆறாத்துயராகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா எங்களை மட்டுமன்றி வீட்டிற்கு யார் வந்தாலும் அவர்களை அன்புடன் உபசரித்து குசலம் விசாரிப்பது அவருடன் கூடப்பிறந்த பண்பு. தமது பேரப்பிள்ளைகளுக்கு அறிவு நிறைந்த கதைகளைச் சொல்லி "ராசா மோனை" என்று அரவணைத்து புத்திமதிகளைக் கூறி வளர்த்தார்கள். இன்று பேரப்பிள்ளைகள் அம்மம்மா எங்களை விட்டு விட்டு போய்விட்டா என்று துயருறுகிறார்கள்.

விதியை வெல்ல யாரால் முடியும்? எனது தாயார் / எமது பேத்தியார்/எமது பூட்டியார் திருமதி புவனேஸ்வரி சதாசிவக்குருக்கள் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்புத் தெய்வமான அம்மாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சிப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
பிரிவினால் துயருறும்
மகள் திருமதி ஞானேஸ்வரி சோமாஸ்கந்தக்குருக்கள்
பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையே!

அகிலத்திலே அம்மா என்றழைத்திடவே
அன்னைக்கு அன்னையாக வாழ்ந்தீர்கள்
ஆருயிராய் எம்மைத் தாலாட்டி சீராட்டி
ஆராட்டி வளர்த்தீர்கள்
இன்று எம்மைத் துயரினிலே மூழ்கவிட்டு
இவ்வுலக வாழ்வையே துறந்தீரோ?
ஈன்றெடுத்த தாய்போல் எம்மை
இனிதாக வளர்த்தீரே!

உழலுகின்றோம் இவ்வுலகினிலே
உங்கள் உணர்வுகளோடு
ஊரறிய உலகறிய இருந்த நீங்கள்
ஊமையாகச் சென்றுவிட்டீர்களே! – எம்
எண்ணமது ஆயிரம் கனவுகள் சுமந்து நிற்க
எமை விட்டுப் பிரிந்தீரோ?
ஏது செய்வதென இவ்வுலகில் – நாம்
ஏங்கியே தவிக்கின்றோம்.

ஐயம் இன்றி நாம் – நல்
ஐஸ்வரியத்தோடு வாழ வழி சமைத்தீரே!
ஒன்பது வாயில்களும் அடைத்தே போயினவோ!
ஒன்று மறியாது தவிக்கின்றோம்
ஓதுவது ஒழியேல் என எமக்கு
ஓதுவித்து, வழிசமைத்தீர்கள்
ஔடதமாய் எமக்கு
ஔவியம் புகட்டினுர்களே!

இன்று நாம் இப்புவியிலே அன்னையை இழந்து அலறியே தவிக்கின்றோம் அமரரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திப்போம்.

சகோதரியின் புதல்வர்கள்
இ. வரதராசாகுருக்கள்
இ. சபேசக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணிற் பெருந்தகை

பெண்ணிற் பெருந்தகையாய் திகழ்ந்த அமரர் சதாசிவஐயர் புவனேஸ்வரிஅம்மா அவர்கள் எங்கள் நெருங்கிய உறவினராவார். அமரர் அவர்களின் வாழ்வு பெண்மைக்கு ஓர் பெரு விருந்தாக அமைந்தது இல்லறம் என்னும் நல்லறத்தை இனிதாக நடாத்தியவர் அச்சம், மடமை, நாணம், பயிர்ப்பு அகந்தனிலே ஒழுக, அறிவு, தர்மம், கடமை, கல்வி அறிந்து, புகட்டி வாழ்ந்தவர் அம்மை அவர்கள்

உற்றாரை அரவணைத்து, ஊராரை ஆதரித்து, அன்பர்களை வரவேற்று பண்போடு வாழ்ந்து வந்தவர் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் என குழந்தைச் செல்வங்களைக் கண்டு கொஞ்சம் குலாவிய பெருமைக்குரிவர்.

அன்னை அவர்கள் மனைத்தக்க மாண்போடு நல்வாழ்வு வாழ்ந்து இனிதே ஏகினார் இறைவனடி அமரரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திப்போமாக.

**இ. வரதராசாகுருக்கள்**
**இ. சபேசக்குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டி

நேற்றுவரை எம்முடன் வாழ்ந்து, வழி பல கூறி, எம் உறவின் மூத்த ஜீவனாக இருந்த பாட்டி. இன்று நீங்கள் எங்கே? தேடுகின்றோம்? உலகெல்லாம் தேடுகின்றோம். எங்கே? எங்கே? சிற்றறிவுக்கு புலப்படவில்லை பாட்டி எங்கே என்று? பேரறிவு சொல்கின்றது பாட்டி பிரபஞ்ச பேராற்றலுடன் இணைந்து விட்டார்கள் என்று. வாழும் வரை ஒரு தெய்வமாகவே வாழ்ந்தார். கணவருக்கு அவர் செய்த பணிவிடைகளைப் பார்த்தே பலர் அதை பின்பற்றினார்கள். ஈழத்தின் அனர்த்தம், அதன் இடம் பெயர்வு, அந்தத் துயரத்திலும் வயது சென்றலும் பாட்டி தாத்தா மேல் காட்டிய அன்பு, பண்பு, பணிவு, பதிபத்தி, உண்மை அன்பு எந்தத்துயரிலும் அழிவதில்லை என்பதை எங்களுக்கு உணர்த்தியது. தாத்தாவின் மறைவு, அதன் பின் பாட்டியின் உள்ள உணர்வுகளின் மாற்றம், பெரும் துயரையும் தாங்கும்திறன், இறைபக்தியின் உச்சநிலை அனைத்தையும் கண்டு வியந்தோம். 88 வயதிலும் தள்ளாடாமல் பாட்டி தனித்து இயங்கிய விதம் தன் கடமைகளைத் தானே செய்த திறன், சிறுவர்களையும் இளைஞர்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. காலத்தின் கோலம் எம் தேசத்துயரின் கந்தகக்காற்று பாட்டியை நோயில் ஆழ்த்தியது ஒரு மாதகால போராட்டம் காலனுக்கும், வைத்தியத்துறைக்கும் காலன் ஜெயித்தான். துயர் நீங்கவில்லை பாட்டி, துயர் நீங்கவில்லை கௌதம புத்தனும், ஔவைப்பாட்டியும் ஞாபகத்தில் வருகின்றார்கள். ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ இல் மானிலத்தே என்ற கூற்று எம் மனதை அமைதிப்படுத்தினாலும் அம்மாவை இழந்த பிள்ளைகளின் புலம்பல், அத்தகைய இழந்த மருமக்களின் புலம்பல் பாட்டியை இழந்த பேரப்பிள்ளைகளின் புலம்பல். பூட்டியை இழந்த பிஞ்சு உள்ளங்களின் கதறல் தனிமை, தவிப்பு யாரிடம் செல்வோம் யாரிடம் சொல்வோம். பாட்டி! பிரபஞ்சப் பேராற்றலில் தங்கள் உயிர் சக்தி இணைந்து சாந்தியும், அமைதியும் அடைய வேண்டும் என்று எல்லாம் வல்ல நீர்வேலி அரசசேகரி விநாயகப் பெருமானையும் நீர்வேலிக் கந்தனையும், எல்லாம் வல்ல மகா சக்தியையும் எங்கும் நிறைந்த பரம்பொருளையும் இறைஞ்சி வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பெரும் துயருறும்
பேரப்பிள்ளைகள்.

09.04.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

அம்மா நீர் நோயுற்ற செய்தி கேட்டு அவதியுற்றோம்
நோய் தீர வேண்டி நின்றோம்
மெய்யாக கடல் கடந்து லண்டனிலிருந்து
வந்து காணமுடியாமல் கதறி நின்றேன். (மகன்)

இந்நேரம் மரணித்த செய்தி கேட்டோம்
இதயமும் வெடித்ததம்மா என்னே செய்வேன்
அன்னைக்கு மகன் செய்யும் கடனைக் கூட
செய்ய முடியாத பாவியாய்த் துடிக்கின்றேன். (மகன்)

சித்தத்தில் நிறைந்த என்
செல்வனே மாமியாரே
வைத்த உயர் அன்புடையாய்
வான் வாழ்வு விரும்பினையோ
கொவ்வைச் சிரிப்பை உளம்
கொள்ள நினை எண்ணி மனம்
பித்தாகிப் பிதற்றுவதே
பெரும் பாடாய்ப் போச்சுதம்மா (மருமகள்)

அன்னைபோல் எய்திய அன்பு
காட்டி அரவணைத்தாயே
இன்று நாள் உம் முகம் காண
முடியாது தவிக்கின்றேன்
என்று இனி எம்முன் தோற்றுவாய்
என எண்ணி ஏங்குகின்றேன் பாட்டி (பேத்தி)

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ச. சத்தியஜெயன்**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரத்துவம் அடைந்த திருமதி ச. புவனேஸ்வரி அம்மா அவர்களின்

# நினைவு அஞ்சலி

இப் புண்ணிய சீலரின் திடீர் மறைவு எல்லோரையும் ஆறாத்துயரில் ஆற்றி விட்டது.

நீர்வேலி என்னும் கிராமப் பகுதியில் பெருவாழ்வு படைத்து விளங்கிய பிரம்மஸ்ரீ ஜெயநாதக் குருக்கள் தம்பதிகளின் அருந்தவப் புதல்வியாய் புவனேஸ்வரி அம்மா பிறந்தார். இவர் இல்லற வாழ்வில் அடியெடுத்து வைத்தார் காரைநகர் எனும் கவினுறு பகுதியில் பெரும் சீர் சிறப்புடன் வாழ்ந்த பிரம்மஸ்ரீ சோமசுந்தர ஐயர் தம்பதிகளின் அருந்தவப் புதல்வனாய் பிறந்த சதாசிவக் குருக்கள் அவர்களை மணம் பற்றி மனையாளாகி மட்டற்ற மகிழ்ச்சியில் இத்தம்பதியர் இருவரும் மலரும் மனமும் போல இணை பிரியாது இல்லறப் பூங்காவில் இனிதே உலாவரும் நாளில் புத்திரர்கள் இருவர் புத்திரிகள் நால்வர் ஆக அன்பு பிள்ளைகள் அறுவரைப்பயந்து அளவிறந்த ஆனந்தம் கொண்டனர். இப்பிள்ளைகள் அறுவருக்கும் வளமான நல்வாழ்த்துக்கள் வகுத்து மன நினைவு கண்டார்கள்.

இவரின் மூன்றாவது அன்புப் புதல்வி விமலாதேவியின் ஆருயிர்த் துணைவராக பத்தமேனி பிரம்மஸ்ரீ முத்துச்சாமி குருக்கள், சிவசுப்பிரமணியசர்மாவுக்கு மாங்கல்யம் சூட்டி மனையாளாக்கி மகிழ்ச்சியில் சீர் சிறப்புடன் பெரும் சுற்றம் சூழ வாழும் நாளில் திடீரென்று நோய்வாய்ப்பட்டு 2006ம் ஆண்டு பங்குனித் திங்கள் 8ம் நாள் வெள்ளிக்கிழமை பின்இரவு 1.45 மணி வரையில் இம் மண்ணுலகை நீத்து விண்ணுலகெய்தினார்.

இவர் இன்னும் பலகாலம் எங்கள் மத்தியில் வாழவிடாமல் கொடிய விதிசதி செய்து விட்டது. விதி வலிது என்று சொல்லுவார்கள் அதை வெற்றி கண்டோர் யாருமில்லை.

அவரின் ஆத்மா பரிபூரண சாந்தி பெறுவதற்கு எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் பாலிப்பாராக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கோவில் வீதி,
நல்லூர்.

**மு. சிவசுப்பிரமணியசர்மாவும் பாரியாரும்**
**(அன்பு மருமகனும் அருமை மகளும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆயிரம் பிறை கண்ட அன்னை"

எங்கள் குடும்பத் தலைவியும் எமது பாட்டியுமாகிய அமரர் திருமதி புவனேஸ்வரி அம்மா சதாசிவக்குருக்கள் அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் இன்று வைக்கப்பட்ட முதூபரும் அம்மையார். அன்பால் அனைவரையும் ஆதரித்து தானும் சூழ்ந்த சுற்றமும் சிறப்புற வாழ்ந்து அனைவர்க்கும் எடுத்துக் காட்டாக ஆயிரம் பிறை கண்ட அன்னையாக நிலைத்து இறைவனடியினை எய்தியுள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய யாமும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து அமைதியடைகின்றோம்.

**இவ்வண்ணம்**
**க. சாமிநாதக்குருக்கள் சா. சுலோசனாதேவி**
**குடும்பத்தவர்கள்**
**அருள்மிகு குறிஞ்சிக் குமரன் ஆலயம்**
**கும்மர்ஸ்பாக் ஜேர்மனி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று நீ இல்லையே அம்மம்மா....

அன்பு காட்டியே அம்மம்மா – நீ
அப்பம் சுட்டுத் தந்தனையே
இன்முகம் காட்டியே அம்மம்மா – உன்
இதயத்தைத் தந்தாயே

நிலவு காட்டிய எம் அம்மாவுக்கு
நிலவு காட்டிய அம்மம்மாவே
தாலாட்டுப் பாடி நீ எம்மைத் தூங்கவைத்த
பாலப்பருவத்தை மறப்போமா?

நடையும் எமது அம்மம்மா – உன்
கதையழகும் மென்மை தான் – தங்கு
தடை ஏதுமின்றி நீ பொழிந்த
தாய்மைப் பாசமோ வற்றாத நீரூற்று

நேற்றுவரை உன்னுடைய பாசமழை
நேச நீருண்டு நிமிர்ந்திருந்தோமே
இன்று நீ இல்லையே அம்மம்மா
இனியென்ன சொல்ல நாவில் நீரில்லையே.

அச்சுவேலி.

**மோகன் ஜெயம்**
**பேரப்பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது அன்புக்குரிய அருமை அம்மம்மா

அமரர் திருமதி புவனேஸ்வரி அம்மா சதாசிவஐயர், எங்கள் எல்லோருக்கும் அம்மம்மாவாகி அதாவது எனது மனைவியின் அம்மம்மா சிறப்புடன் வாழ்ந்தார். என்னை குமார் பேரன் என்று செல்லமாக அழைத்துக் கொண்டு வருவார் எனது வீட்டுக்கு அருகிலேயே நீண்ட நாட்களாக இருந்தபடியால் எங்கள் மேல் அன்பாக இருந்தார். அவர் பல மக்கட் செல்வங்களையும் பேரப்பிள்ளைகளையும், பூட்டப்பிள்ளைகளும் பெற்று களிப்புற வாழ்ந்து இன்புற்றிருந்தார். அவர் கணவரை எட்டு வருடங்களுக்கு முன்பு இதே பங்குனி மாதம் இழந்து இப்பொழுதும் பங்குனி தாம் அவரடி சேர்ந்தார்.

இவர் ஆயிரம் பிறை கண்ட மூதாட்டியாக நீர்வையில் வாழ்ந்தவர். அவர் சிறிது காலம் நோய் வாய்ப்பட்டிருந்து சிவப்பேறடைந்துள்ளார். அவருடைய ஆன்மா சாந்தியடைய திருவருள் பாலிப்பதாக.

நீர்வேலி

**குமார், கமலா**
**ரூபன், திவா**
**(பூட்டப்பிள்ளைகள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஆசை அம்மம்மா

எங்கள் மேல் பண்பும் பாசமுமாக வளர்த்த அம்மம்மா எங்களை விட்டுப் போய் விட்டார். சிறு வயதில் எங்களுக்கு ஊட்டி வளர்த்தது இன்றும் நினைவில் இருக்கிறது அன்பு பேரன் என பாசமழை பொழிந்தீர்களே. சிறுவயதில் என்னைப் படிபடி என்று சொன்னது எத்தனை நாட்கள். சிறு கதைகள் விடுகதைகள் சொல்லி எங்களை மகிழ்வித்தீர்கள். நான் அழுதால் வந்து தேற்றுவீர்களே. இவ்வாறு களிப்புற வாழ்ந்த எங்களை விட்டுப் போய்விட்டீர்களே. அம்மம்மா என்று இனியாரை அழைப்பது. எங்கள் துயரம் எவ்வாறு தீருமோ?

கோவில் வீதி,
நல்லூர்.

**சிவா, மீனா**
**வத்சன், வாதிகா**
**(பூட்டப்பிள்ளைகள்)**

# தவிக்கின்றோம்

ஐயகோ! நாம் காண்பதிங்கே
கனவோ நனவோ தெரியவில்லை!
நம்மையெல்லாம் பாசமுடன்
அரவணைத்த செல்லப்பாட்டி நேற்றிருந்தார்!
இன்றில்லை! ஊட்டி வளர்த்து உறங்க
வைப்பார்! இன்று நாம் உறக்கமின்றி
தவிக்கின்றோம்! பாட்டியே எங்கு சென்று
மறைந்தீர்களோ! உங்கள் பாசத்திற்காக
நாம் இங்கு ஏங்கித் தவிக்கின்றோமே!

**பாசமுள்ள**
**ஜெகன், மனுப்பிரியா,**
**சாருகேசினி, வாப்பிரதன்**
**(பூட்டப்பிள்ளைகள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கு சென்றீர்களோ?

எங்கள் அன்பிற்கினிய பாட்டியே
நெஞ்சமதில் உங்கள் நினைவலைகளே!
உருவமதில் எம்மை விட்டு பிரிந்தாலும்
எங்கள் உள்ளமதில் தெய்வமாகி
எங்களை ஆசீர்வதித்திடுவீர்!

மனித வாழ்வினில் இறப்பு பிறப்பு என
இரு பக்கங்கள் உள்ளது. அதில்
உங்களது பிறப்பினை மகிழ்வோடு
ஏற்றுக் கொண்ட எம்மால்
உங்களது இறப்பென்னும் பிரிவினை
ஜீவரிணிக்க முடியாதுள்ளதே!

எம் சிறுவயதினில் வாழ்விற்கு
வேண்டிய விடயங்களை
செல்வனவே கதைகளினூடாகவே
சொல்லிடுவீர்களே!
குடும்பத்தில் உள்ளோர் ஒற்றுமையாய்
மகிழ்வுடன் வாழ முன்னா தாரணமாய் திகழ்ந்தீர்களே!
இன்று எம்மையெல்லாம்
விட்டு எங்கு சென்றீர்களோ!
ஒவ்வொரு புதுவருடத்திலும்
உங்களது ஆசீர்வாதம் எமக்கு
கிடைத்திடுமே!
இவ்வருடத்திலும் இனிபிறக்கின்ற
வாதம் பெற்றிடுவோம்?
எனினும் நாம் நம்புகின்றோம்
எங்களுக்கு உங்கள் ஆசீர்வாதம்
என்றும் உண்டு என!

**பேரப்பிள்ளைகள்**
**ச. சத்தியரூபி (ரூபா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை புவனேஸ்வரி அம்மா

நீர்வைக் கிராமத்தில் வாழ்ந்த முதுபெரும் அந்தணர் குலதிலகமாக விளங்கிய அமரர் சதாசிவஐயர் புவனேஸ்வரியம்மா அவர்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், கொப்பாட்டப்பிள்ளைகள் வரிசையில் மூன்று தலைமுறையினரைக் கண்டு பெருநிறைவுடன் சிறப்புற வாழ்ந்து பெருமைக்குரியவராவர். ஆசிரியப் பணியாலும் குருத்துவப்பணியாலும் சிறப்புடன் பலருக்கு வழிகாட்டிய அமரர் சதாசிவக் குருக்கள் குடும்பத்தில் ஒருநிறை குடம் போல தளம்பாது பலருக்கும் பயன் தந்து ஆலவிருட்சம் போல பரந்து செறிந்து பெருவாழ்வு கண்ட அன்னை புவனேஸ்வரியம்மா அவர்கள் ஆயிரம் பிறைகண்ட நிறைவாழ்வுடன் இயற்கை எய்தினார்.

அன்னை அவர்கள் அமரத்துவம் எய்தினாலும் அவர் குடும்பத்தினர் அவர் வழியிற் சிறப்புடன் வாழ்ந்து எல்லோருக்கும் பெருமை தரும் விதத்தில் விளங்குவது அந்தணர்குலத்திற்கே தனிச்சிறப்புத் தருவதாகும்.

அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

**நீர்வைமணி தியாகராசக்குருக்கள்**

# உள்ளம் கவர்ந்த உத்தமி

"அம்மம்மா" என்று அழைத்தவரும் "பாட்டி" என்று கூப்பிட வைத்தவருமான திருமதி புவனேஸ்வரி அம்மா இறைபதம் எய்து விட்டார். அன்புடன் "சாப்பிட்டியா" என்ற குரல் ஓய்ந்து விட்டது. அம்மம்மா என்ற சொல்லுக்கு ஆள் இல்லை. - எந்த நேரமும் பொறுமையுடன் எங்களை அணைத்த தெய்வம் மறைந்து விட்டது. பெருமை சொல்லுதற்கு அரிது. பண்பாடு போற்றுதற்குரியது. பூட்டப்பிள்ளைகளுடன் குலாவும் காட்சி காண்பது அரிதாகிவிட்டது. இவ்வாறு எல்லோர் உள்ளத்திலும் இடங்கொண்ட மூதாட்டி இன்று இல்லை ஆனால் உள்ளத்தில் இருந்து என்றும் நீங்குவதில்லை ஆன்ம சாந்திக்கு பிரார்த்திப்போமாக.

**கா. சோமதேவக் குருக்கள்**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் மங்கையர் திலகம்

எம் சமூகத்தில் அமைதியாய், அடக்கமாய்,
கண்ணுக்கினியராய், மனித நேயத்துடன்,
அந்தணர் குலத்துதித்த மங்கையல் திலகமே
அமரர் ஸ்ரீமதி புவனேஸ்வரியம்மா
சதாசிவக் குருக்கள் ஆவர்.

நாமறிந்த காலத்திற்கு முன்னரே, எம்
கிராமத்தில் சிறப்புடன் வாழ்ந்த
வைகீத அந்தணர் மரபினைச் சார்ந்த
பிரம்மஸ்ரீ செல்லக்குருக்கள் தம்பதியினரின்
புதல்விகளில் ஒருவராய் மலர்ந்து,
உரிய காலத்தில் காரைநகர் உத்தய
ஆசிரியப் பெருமகன் பிரம்மஸ்ரீ சதாசிவக்
குருக்களை தம் துணைவராய்ப் பெற்று
இல்லறமாம் நல்லறத்தில் சிறப்புடன்
வாழ்ந்து, மக்கள் அறுவரைப் பெற்றெடுத்த
மகராசியாய், பெறற்கரிய பேறு
பதினாறும் கண்டு, தள்ளாத வயதிலும்
தளர்வின்றித் தம் பிள்ளைகள், பேரர்
பூட்டர் சூழ எண்பத்தெட்டு
ஆண்டுகள் மண்ணில் நல்ல வண்ணம்
வாழ்ந்த பெரும்பேறு பெற்றுத் தம்
பூவுலக வாழ்வை இனிதே முடித்த
பெருமாட்டியாவர்.

அம்மையின் சீலமும் சாந்தமுமிக்க
வாழ்வும், உயர்விலும் தாழ்விலும்
தளர்வின்றித் தம்மை அண்டியவர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெல்லாம் இன்முகத்துடன்
காட்டிய பரிவும் உபசரணையும்
தாயுள்ளமும் அவரின் தனித்துவமான
ஆளுமையின் முத்திரையாகும்!

அம்மையின் விண்ணக வாழ்வு பேரின்பப்
பெரும் சாந்தியில், அம்மை – அப்பன்
திருவடியில், இனிதே அமையப்
பிரார்த்தித்து அவர்களின் குடும்பத்
தினருக்கும் எம் அனுதாபத்தைக்
கூறி, இவ் அஞ்சலி உரையை
முடிகின்றேன். வணக்கம்!

13-04-2006

த. ந. பஞ்சாட்சரம்
நீர்வேலி

## வாழ்க்கை

| | |
|---|---|
| வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் | – அதை நழுவவிடாதீர்கள் |
| வாழ்க்கை ஒரு பயணம் | – அதைச் சென்று முடியுங்கள் |
| வாழ்க்கை ஒரு விடுகதை | – அதை விடுவியுங்கள் |
| வாழ்க்கை ஒரு விளையாட்டு | – அதில் ஈடுபடுங்கள் |
| வாழ்க்கை ஒரு போராட்டம் | – அதை வென்று காட்டுங்கள் |
| வாழ்க்கை ஒரு வெகுமதி | – அதை ஏற்றுக் கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு போட்டி | – அதில் வெற்றி பெறுங்கள் |
| வாழ்க்கை ஒரு கலை | – அதை அழகுபடுத்துங்கள் |
| வாழ்க்கை ஒரு வேதனை | – அதைத் தாங்கிக்கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு சவால் | – அதை எதிர்கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு சோகம் | – அதற்கு மனம் தளராதீர்கள் |
| வாழ்க்கை ஒரு பிரச்சினை | – அதற்குத் தீர்வு காணுங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

கடந்த 07-04-2006 வெள்ளிக்கிழமை இறைபதமெய்திய எமது
குலதெய்வம்

**அமரர்**

## திருமதி புவனேஸ்வரி அம்மா சதாசிவக்குருக்கள்

எமது வாழ்க்கைக்கு ஒளி விளக்காய் இருந்து எம்வளமான
வாழ்வுக்கு வழி வகுத்த எங்கள் குடும்பத் தலைவி மரணச்
சடங்கிலும் இறுதி யாத்திரையிலும் பங்கு பற்றி அனுதாபம்
தெரிவித்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இறுதிக்
கிரியைகளும் ஊர்வலமும் சிறப்பாக நிகழ்வதற்கு அன்போடு உதவி
புரிந்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும்
வெளிநாட்டிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம்
அனுதாபச் செய்தி தெரிவித்தோருக்கும் அந்தியேட்டி சபிண்டீகரண
கிரியைகளில் பங்கு பற்றி சிறப்பித்தவர்களுக்கும் மற்றும்
நோய்வாய்ப்பட்டிருந்த வேளை உதவிய வைத்தியர்கள், தாதியர்கள்,
ஊழியர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும்
எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

SRJ பிறிண்டேர்ஸ், இராஜ வீதி, நீர்வேலி மேற்கு. 077 7917549

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சா

### தந்தை வழி

(பாரத்துவாஜ ஜோத்திரம்)

ச. சோமசுந்தரக் குருக்கள்
\+
விசாலாட்சிஅம்மா

சோ. சதாசிவக்குருக்கள்

ஞானேஸ்வரி
\+
இ. சோமஸ்கந்தக்குருக்கள் (அமரர்)

சறோஜா (அமரர்)
கனகசபேசர்மா + மீனாம்பாள்
ஜெயஸ்ரீ + பரமேஸ்வரக்குருக்கள்

கருணாகரவிசாகசர்மா

இராமச்சந்திரன் - நகுலா = பிரசாந் + நிஜோஜினி
வசந்தி + ரகுபதிசர்மா = ஜெனா, சரணியா
ஜெயச்சந்திரன்

குகானந்தசர்மா + ஜெகதாம்பாள்

கார்த்திகா
ராம்குமார்
ரஞ்சினி

ஸ்ரீகாந்தன் + விஜயஸ்ரீ = கார்த்திக்
பிரதீப்
சௌமியா

ஸ்ரீதரன் + சுமதி = சஜன்
துசான்

சத்தியோசாதசர்மா
\+
வித்தியாதேவி

சத்தியதேவி
\+
கோபி

வனஜா
\+
ஜெகன்

பிரசாதனன்
கௌசிக்
விதுசாந்

சத்தியரூபி

சத்தியரூபன்

லேகா
\+
முரளி

ஆத்மிகா
கீனதயன்

விமல
\+
சுப்பிரமன

கமலா
\+
குமாரசதா
\+
பாலசு
திவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ாவழி

தாய்வழி

(காசிபகோத்திரம்)

ஜெகநாதக்குருக்கள் (செல்லக்குருக்கள்)
+
பொன்னம்மா

புவனேஸ்வரிஅம்மா அமிர்தேஸ்வரிஅம்மா

மலாதேவி + மணியசர்மா

தேவசேனாதிபதி + மாணிக்கஜயர் (அமரர்)

ஜெயந்தி + சோமதேவக்குருக்கள்

வரப்பிரதன்
சிவஜெயன்
நிதர்சனன்
சிந்துகேயன்
மனுப்பிரியா
சாருகேசினி

சாந்தாதேவி + கனகசபாபதிசர்மா

பாலமுருகன் மீரா

சத்தியஜெயன் + கீதா

பிரார்த்தனா

பி

லாதேவி + சதாசிவசர்மா + லரூபன் வாகரன்

ஜெயபாலசர்மா + செண்பகவல்லி
சிந்துயா
சுமனஜா
+
சிவரத்மயன்

சுலோசனதேவி + சுவாமிநாதசர்மா

சக்திதரன்
ஸ்ரீனா
சரணிகா

பத்மாதேவி + கமலராஜசர்மா

சிவபாலசர்மா + மீனாலோசனி

ஸ்ரீவக்ஸசர்மா
விஸ்வாதிகா

ஜெயதேவி
மோகனசர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்."

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SRJ பிறின்டேர்ஸ், இராசவீதி நீர்வேலி மேற்கு. 077 7917549